# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அக்டோபர் மாத அவசரக்கூட்டம் –ம் தேதி ஆண்டு வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற்றது .

**பொருள் எண்.1**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை கடிதம் ந.க.எண்.47718/2013/UGSS-2 நாள் : 14.09.2018 –ல் தெரிவிக்கப்பட்டுள்ளதன் படி, குளச்சல் நகராட்சியில், Fecal Sludge and Septage Management திட்டத்தின் கீழ், 40 Cum/ day capacity (KLD) கொண்ட Fecal Sludge Treatment Plant (FSTP) அமைப்பதற்கு கீழ்க்காணும் பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| Sl. No | Description of work | Estimated cost ( Rs. ) |
|---|---|---|
| 1 | Construction of Screening chamber | 4,10,910.00 |
| 2 | Construction of Stabilization Tank | 51,58,680.00 |
| 3 | Construction of Sludge drying bed | 1,03,26,024.00 |
| 4 | Construction of Integrated settler and anaerobic filter | 15,89,679.00 |
| 5 | Construction of Horizontal Planted Gravel Filter | 10,69,539.00 |
| 6 | Construction of Polishing Pond (Lump sum) | 5,35,000.00 |
| 7 | Construction of Collection tank 1 & 2 | 7,91,103.00 |
| 8 | Filling ,Compacting and construction of ramp (Lumpsum) | 7,57,250.00 |
| 9 | Plumbing between structures | 4,33,806.00 |
| 10 | Construction of SDB registers (pits to collect filtered water from SDB) | 4,92,497.00 |
| 11 | Construction of storm drain | 4,82,029.00 |
| 12 | Construction of sludge storage room | 6,82,387.00 |
| 13 | Construction of operator's room, office room and lab | 8,53,065.00 |
| 14 | Compound wall with barbed fencing and entry gate with name board (Lump sum) | 10,73,280.00 |
| 15 | Supply, delivery, mechanical tiller, erection of DG set, solar powered sludge pump and submersible pump set for bore well | 23,03,850.00 |
| 16 | Supplying, erecting and fixing of roof for sludge drying beds | 16,73,000.00 |
| 17 | Provision for effluent disposal arrangement (Lump sum ) | 3,67,700.00 |
| 18 | Construction of internal access roads with paver block | 6,79,000.00 |
| 19 | Supply and providing street lighting | 15,42,091.00 |
| 20 | Providing rainwater harvesting | 20,000.00 |
| 21 | Providing green belt and landscaping in premises | 7,62,390.00 |
| 22 | Construction of retaining wall and filling of existing Uppalam Land | 1,31,35,259.00 |
| 23 | Providing approach road and cross road at Uppalam Compost yard | 47,00,000.00 |
| 24 | Plumping works | 3,67,683.00 |
| | GST 12% | 38,84,515.56 |
| | Labour welfare 1% | 3,23,709.63 |
| | Contingency 1% | 4,20,811.81 |
| | **Grand Total** | **5,48,35,259.00** |

எனவே மேற்காணும் பணிகளுக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.5,48,35,259/—ஐ முழு மானியமாக Fecal Sludge and Septage Management திட்டத்தின் கீழ் முழு மானியமாக விடுவிக்க கேட்டு நகராட்சி நிர்வாக ஆணையருக்கு விரிவான திட்ட அறிக்கை சமர்ப்பிக்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.566—1/2018/இ1

**தீர்மானம் எண்.1914 அங்கீகரிக்கப்பட்டன.**

**பொருள் எண்.2**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்படும் தள்ளு வண்டிகளில் வீல்கள் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் புதிய வீல்கள் வாங்க விலைப்புள்ளிகள் பெறப்பட்ட விவரம் கீழ்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | M/s.Southern solid waste management service<br>Mulagumoodu (p.o) | முன் வீல் ஒன்றிற்கு ரூ.960/—<br>பின் வீல் ஒன்றிற்கு ரூ.1025/— |
| 2 | M/s.Sri Muruga Enterprises<br>Tirupattur | முன் வீல் ஒன்றிற்கு ரூ.975/—<br>பின் வீல் ஒன்றிற்கு ரூ.1050/— |
| 3 | M/s.Arunai con Tech<br>Chenna | முன் வீல் ஒன்றிற்கு ரூ.1125/—<br>பின் வீல் ஒன்றிற்கு ரூ.1075/— |

மேற்படி விலைப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் அளித்துள்ள M/s.Southern solid waste management service நிறுவனத்திற்கு பொது சுகாதார அவசர அவகியம் கருதி வினியோக உத்தரவு வழஙக மன்ற அஙகீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க. எண்.எச்1/3034/2014

**தீர்மானம் எண்.1915 அங்கீகரிக்கப்பட்டன.**

**பொருள் எண்.3**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 18.05.2018—ம் தேதிய ஆய்வுக் கூட்ட நேரடி அறிவுரை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் 25.05.2018—ம் தேதிய ஆய்வு கூட்ட அறிவுரையின் படி, குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குப்பைகளை சேகரித்து உரக்கிடஙகிற்கு கொண்டு செல்வதற்கு பொது சுகாதார பிரிவிற்கு தேவையான 2.0 cum Capacity கொண்ட கீழ்க்காணும் வாகனம் வாஙகுவதற்கு தயார் செய்யப்பட்டுள்ள விரிவான திட்ட அறிக்கையினை திட்ட நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழஙக கேட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் சமர்ப்பிக்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

| Sl.No | Name of the Work | Estimated Amount (Rs.in lakh) |
|---|---|---|
| 1 | Purchase of light Commercial vehicles (LCV 2.0 cum Capacity ) 3 Nos. | 16.80 |
| | **Total** | **16.80** |

ந.க.எண்.566—4/ 2018 /இ1

**தீர்மானம் எண்.1916 அங்கீகரிக்கப்பட்டன.**

## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் செப்டம்பர் மாத சாதாரணக்கூட்டம் 09.2018–ம் தேதி ஆண்டு திஙகட்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற்றது .

தனி அலுவலர் / ஆணையாளர்

### பொருள் எண்.1

01.04.2018 முதல் சொத்தவரி சீராய்வு செய்து வரி நிர்ணயம் செய்வது குறித்து அரசாணை (MS) எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (ந.நி.IV) துறை நாள். 19.07.2018–ன்படி கீழ்கண்ட விபரப்படியாக சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

1. குடியிருப்பு கட்டிடஙகள் – 50% மிகாமல்
2. வாடகை குடியிருப்பு கட்டிடஙகள்– 100% மிகாமல்
3. குடியிருப்பு அல்லாத கட்டிடஙகள் – 100% மிகாமல்

அரசாணை (MS) எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (ந.நி.IV) துறை நாள். 26.07.2018–ன்படி

1. குடியிருப்பு கட்டிடஙகள் – 50% மிகாமலும்
2. குடியிருப்பு அல்லாத கட்டிடஙகள் – 100% மிகாமலும்

பொது சொத்து சீராய்வு மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணைகளின்படி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 20555/2018/ஆர்1, நாள். 20.08.2018 மற்றும் வழிகாட்டுதலின்படி சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டுமெனவும் மேலும் சொத்துவரி விதிப்பு நியாயமானதாகவும், முறையானதாகவும், ஏற்றத்தாழ்வுகள் அற்றதும், வெளிப்படை தன்மை கொண்டதாக இருத்தல் வேண்டுமெனவும் இப்புதிய முறை சொத்துக்கள் அமைந்துள்ள பகுதிகளின் வாடகை அடிப்படையில் அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்து மண்டல அடிப்படை மதிப்பை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.4314/93/ஆர்1, நாள்.11.01.93–ன் படி மாற்றியமைத்து சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ளப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.4826/2012/அ1, நாள்.28.08.2018–ன் படி பொது சொத்துவரி நிர்ணயம் செய்ய நியமிக்கப்பட்ட குழு சமர்பித்த அறிக்கையின்படி கீழ்கண்ட விபரப்படியாக மண்டல அடிப்படை மதிப்பில் சிறிது உயர்வு செய்தும், மண்டலத்தினை மாற்றியமைத்தும் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ளலாம்.

<u>அடிப்படை மண்டல மதிப்பு –</u>

| மண்டலஙகள் | ஏற்கெனவே உள்ள அடிப்படை மதிப்பு (சதுர அடிக்கு) | தற்பொழுது நிர்ணயம் செய்யும் அடிப்படை மதிப்பு (சதுர அடிக்கு) |
|---|---|---|
| A | ரூ.2.05 | ரூ.2.50 |
| B | ரூ.1.05 | ரூ.1.30 |
| C | ரூ.0.75 | ரூ.0.90 |

<u>மண்டலஙகள்–</u>

| வார்டு எண் | தெரு எண் | தெரு பெயர் | 01.04.2008 பொது சொத்துவரி சீராய்வின் போது நிர்ணயிக்கப்பட்ட மண்டலம் | 01.04.2018 பொது சொத்துவரி சீராய்வின்படி தற்போது மாற்றியமைக்க ப்படும் மண்டலம் |
|---|---|---|---|---|
| 1 | 1 | சாஸ்தான்கரை | B | A |
| | 2 | வடக்கு கள்ளியடைப்பு | C | B |
| | 3 | பவுண்டரி ரோடு | C | B |
| | 4 | தெற்கு கள்ளியடைப்பு | C | B |
| | 5 | தொலைபேசி நிலைய சாலை | C | B |
| | 6 | ஜெயபால் காம்பவுண்ட் | C | B |
| | 7 | அழகுவிளை | C | B |
| | 8 | வலியவிளை | C | B |
| | 9 | புதுத்தெரு | C | B |
| | 10 | பண்டாரவிளை | C | B |
| | 11 | மதனாவிளை | C | B |
| 2 | 1 | மெயின் ரோடு அண்ணா சிலை அருகில் | A | A |
| | 2 | புதுத்தெரு | C | B |
| | 3 | மதனாவிளை | C | B |
| | 4 | பண்டாரவிளை | C | B |
| | 5 | திருவள்ளுவர் சாலை | C | B |
| | 6 | பொட்டல் விளை | C | B |
| | 7 | பர்ணட்டிவிளை | C | B |
| | 8 | சீம்பிளிவிளை | C | B |
| | 9 | தும்பக்காடு | C | B |
| | 10 | கொம்பன்விளாகம் | C | B |
| | 11 | நாராணயன் நகர் | C | B |
| 3 | 1 | மெயின் ரோடு அண்ணா சிலை அருகில் | A | A |
| | 2 | செக்கலா தெரு | C | B |
| | 3 | சன்னதி தெரு | C | B |
| | 4 | குளச்சல் கடை | C | B |
| | 5 | கீழத்தெரு | C | B |
| | 6 | ஆசாரிமார் தெரு | C | B |
| | 7 | செட்டியா 2–வது தெரு | C | B |
| | 8 | சீம்பிளிவிளை | C | B |
| | 9 | மேலத்தெரு | C | B |
| 4 | 1 | பள்ளி ரோடு | B | A |
| | 2 | ஆண்டிப்பிள்ளை தெரு | C | B |
| | 3 | மேலத்தெரு | C | B |
| | 4 | சன்னதிதெரு | C | B |

| | | | | |
|---|---|---|---|---|
| | 5 | செட்டித்தெரு | C | B |
| | 6 | மேற்கு கடற்கரை சாலை | A | A |
| | 7 | மேற்கு கடற்கரை சாலை | C | B |
| | 8 | கொம்பன்விளாகம் | C | B |
| | 9 | ஆசாத் நகர் | C | B |
| | 10 | ஆசாரிமார் தெரு | C | B |
| | 11 | கீழத்தெரு | C | B |
| | 12 | காரிதாஸ் காலனி | C | B |
| | 13 | சீம்பிளிவிளை காலனி | C | B |
| | 14 | கே.எஸ்.எஸ் காலனி | C | B |
| | 15 | சாம்பவசிவபுரம் காலனி | C | B |
| | 16 | எபிகோர் காலனி | C | B |
| | 17 | வான்மலர் காலனி | C | B |
| | 18 | கே.எஸ்.எஸ் காலனி 2 | C | B |
| | 19 | தோழமை காலனி | C | B |
| | 20 | யூ.இ.எல்.சி காலனி | C | B |
| **5** | 1 | கொட்டில்பாடு | C | C |
| **6** | 1 | கொட்டில்பாடு | C | C |
| **7** | 1 | கொட்டில்பாடு | C | C |
| | 2 | சாம்பசிவபுரம் | C | C |
| | 3 | ஜோசப் பெனடிக்ட் காலனி | C | C |
| | 4 | மரமடி | C | C |
| | 5 | பெரியநாயகி காலனி | C | C |
| | 6 | இந்திரா காலனி | C | C |
| | 7 | சிங்காரவேலன் காலனி | C | C |
| | 8 | அந்தோணியார் காலனி | C | C |
| | 9 | துறைமுகபாலம் சாலை | C | A |
| | 10 | துறைமுகபாலம் சாலை | C | B |
| **8** | 1 | மரமடி | C | B |
| | 2 | மரமடி | C | C |
| **9** | 1 | மரமடி | C | B |
| | 2 | மரமடி | C | C |
| | 3 | துறைமுகத்தெரு | C | B |
| | 4 | துறைமுகத்தெரு | C | C |
| **10** | 1 | துறைமுகத்தெரு | C | B |
| | 2 | துறைமுகத்தெரு | C | C |
| **11** | 1 | துறைமுகத்தெரு | C | B |
| | 2 | துறைமுகத்தெரு | C | C |
| **12** | 1 | துறைமுகத்தெரு | C | B |
| | 2 | துறைமுகத்தெரு | C | C |
| **13** | 1 | துறைமுகத்தெரு | C | B |
| | 2 | துறைமுகத்தெரு | C | C |

| | | | | |
|---|---|---|---|---|
| 14 | 1 | துறைமுகத்தெரு | C | B |
| | 2 | துறைமுகத்தெரு | C | C |
| 15 | 1 | துறைமுகத்தெரு | C | B |
| | 2 | துறைமுகத்தெரு | C | C |
| | 3 | மாதா காலனி | C | B |
| | 4 | மாதா காலனி | C | A |
| 16 | 1 | களிமார் | A | A |
| | 2 | களிமார் | B | A |
| | 3 | களிமார் | C | B |
| | 4 | வாய்க்கால் தெரு | C | B |
| | 5 | சைமன்காலனி ரோடு | A | A |
| | 6 | சைமன்காலனி ரோடு | C | B |
| | 7 | பீச் ரோடு | A | A |
| | 8 | பீச் ரோடு | C | B |
| | 9 | மெயின் ரோடு | A | A |
| | 10 | நிரவு விளை | C | B |
| | 11 | நெசவாளர் தெரு | C | B |
| | 12 | அழகனார்கோட்டவிளை | B | B |
| | 13 | அழகனார்கோட்டவிளை | C | B |
| | 14 | மார்க்கெட் ரோடு | C | B |
| | 15 | மார்க்கெட் ரோடு | C | A |
| 17 | 1 | களிமார் | B | A |
| | 2 | களிமார் | C | B |
| | 3 | அழகனார்கோட்டவிளை | C | B |
| | 4 | கனியாகுடி | C | B |
| | 5 | நரிக்கல் | C | B |
| | 6 | பள்ளிவிளாகம் | C | B |
| | 7 | மார்க்கெட் ரோடு | C | B |
| | 8 | பூக்குழி | C | B |
| | 9 | சாஸ்தான்கரை | C | B |
| 18 | 1 | மெயின்ரோடு | A | A |
| | 2 | கிரீன் தெரு | C | B |
| | 3 | பண்டகசாலைபுரம் | C | B |
| | 4 | முகைதீன் பள்ளித்தெரு | C | B |
| | 5 | வாய்க்கால் தெரு | C | B |
| | 6 | பீச் ரோடு | A | A |
| | 7 | ஈழக்காணிவிளை | C | B |
| | 8 | மேற்கு கடற்கரைசாலை | C | B |
| 19 | 1 | மெயின் ரோடு | A | A |
| | 2 | நெசவாளர் தெரு | C | B |
| 20 | 1 | மெயின் ரோடு | A | A |
| | 2 | பள்ளி ரோடு | B | A |

| | | | | |
|---|---|---|---|---|
| | 3 | எம்.ஜி.ஆர் தெரு | C | B |
| | 4 | செட்டிவிளை | C | B |
| | 5 | இலப்பவிளை | C | B |
| 21 | 1 | மெயின் ரோடு | A | A |
| | 2 | இலப்பவிளை | C | B |
| | 3 | காவடிவிளை | C | B |
| | 4 | பண்டகசாலைபுரம் | C | B |
| | 5 | இக்பால் தெரு | C | B |
| 22 | 1 | இக்பால் தெரு | C | A |
| | 2 | பள்ளி ரோடு | B | A |
| | 3 | பந்தவிளை | C | B |
| | 4 | பண்டகசாலைபுரம் | C | B |
| | 5 | இலப்பவிளை | C | B |
| | 6 | மேற்கு கடற்கரைசாலை | A | A |
| 23 | 1 | சாஸ்தான்கரை | B | A |
| | 2 | சாஸ்தான்கரை | C | B |
| | 3 | புல்லன்விளை | C | B |
| | 4 | பூக்குழி | C | B |
| | 5 | காமராஜ் சாலை | C | B |
| | 6 | வண்ணாத்திவிளை | C | B |
| | 7 | வாய்க்கால் தெரு | C | B |
| | 8 | நரிக்கல் | C | B |
| 24 | 1 | மெயின் ரோடு | A | A |
| | 2 | மெயின் ரோடு | B | A |
| | 3 | சாஸ்தான்கரை | B | A |
| | 4 | புல்லன்விளை | C | B |
| | 5 | மார்க்கெட் ரோடு | C | B |
| | 6 | காமராஜ் சாலை | C | B |
| | 7 | வண்ணாத்திவிளை | C | B |
| | 8 | நிரவு விளை | C | B |
| | 9 | நரிக்கல் | C | B |
| | 10 | பள்ளி விளாகம் | C | B |
| | 11 | நேதாஜி தெரு | C | B |

சிறப்பு இன கட்டிடஙகளுக்கான நட்சத்திர ஹோட்டல், வணிக வளாகஙகள், குளிர்சாதன வசதியுள்ள திருமண மண்டபஙகள், மருத்துவமனைகள், ஆகியவற்றிற்கு அடிப்படை மண்டல மதிப்பு அனைத்து வார்டுகளுக்கும் A மண்டலத்தில் நிர்ணயம் செய்வதற்கும், அரசின் ஆணை மற்றும் வழிகாட்டுதலில் வழஙகப்பட்டுள்ள கட்டிடத்திற்கான தள்ளுபடி மற்றும் சலுகைகள் அடிப்படையில் 01.04.2018 முதல் பொது சொத்துவரி சீராய்வு தொடர்பாக பொது மக்களுக்கு 12.09.2018–ல் தினத்தந்தி நாளிதிழில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதுகுறித்து ஆட்சேபனைகள் இருப்பின் 30 நாட்களில் நகராட்சி ஆணையருக்கு எழுத்து மூலமாக நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பலாம் என தெரிவிக்கப்பட்டது. ஆனால் ஆட்சேபனைகள் எதுவும் பெறப்படவில்லை. எனவே மன்றத் தீர்மானம் எண்.1903 நாள் : 10.09.2018–ன் படி உறுதி செய்து மேற்கண்ட விவரப்படி இந்நகராட்சிக்குட்பட்ட வார்டுகளுக்கு பொது சொத்துவரி மேற்கொள்ளஅங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1249/2018/அ1

**தீர்மானம் எண்.1917 அங்கீகரிக்கப்பட்டன**

**பொருள் எண்.2**

இந்நகராட்சியில் தற்போது இயங்கிவரும் 10 கணனிகள் வாங்கப்பட்டு சுமார் நான்கு வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டபடியால் அடிக்கடி பழுது ஏற்படுகிறது. மேலும் பிரிண்டர்கள் வாங்கப்பட்டு சுமார் ஏழு வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டதால் மிகவும் மோசமாக பழுதடைந்து பழுது நீக்கம் செய்ய இயலாத நிலையில் உள்ளது.

தற்போது அனைத்து அலுவலக பணிகள் மற்றும் வசூல் பணிகள் முழுமையாக மையப்படுத்தப்பட்ட இணையதளம் (Centralised Web Based System) மூலம் செயல்படுவதால் வேகம் மற்றும் திறன் கூடிய கணனிகள், ஸ்கேனர் மற்றும் நெட்வொர்க் உடன் கூடிய பிரிண்டர்கள் மற்றும் தேர்தல் மற்றும் அலுவலக பணிக்கு திறன் கூடிய ஒரு மடிக்கணினி தேவைபடுகிறது.

இந்நகராட்சியில் வசூல் பணிக்கு இரண்டு கணனிகள் மற்றும் கணனி பயன்படுத்துபவர்கள் 16 பேர்கள் உள்ளதால் தற்போது திறன் கூடிய 10 கணனிகள், ஸ்கேனர் மற்றும் நெட்வொர்க் உடன் கூடிய 7 பிரிண்டர்கள், 4 டாட்மெட்ரிக்ஸ் பிரிண்டர்கள் மற்றும் ஒரு மடிக்கணினி அவசரமாக தேவைபடுகிறது. கணினி, பிரிண்டர்கள் மற்றும் அதற்குரிய பொருட்கள் (Anti virus மற்றும் network switch உட்பட) வாங்குவதற்கான உத்தேச செலவு ரூ.8,00,000/– ஆகும். எனவே மேற்படி பொருட்களை கொள்முதல் செய்வதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.8,00,000/–க்கு மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க. எண்.இ1/6805/2010

**தீர்மானம் எண்.1918 அங்கீகரிக்கப்பட்டன**

**பொருள் எண்.3**

இந்நகராட்சிக்கு, மாவட்ட ஆட்சியர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் நடவடிக்கைகள் செ.மு.எண்.ஆ2/4230/2017 நாள் : **10.10.2018**–ன் படி, ரூ.**10.00** இலட்சம் மதிப்பீட்டில் கீழ்காணும் பணிகளை மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | குளச்சல் நகராட்சி – பாலத்தன்கரை பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து கடற்கரை பகுதி மற்றும் சுற்று வட்டார பகுதிகளுக்கு குழாய் பதித்து தண்ணீர் கொண்டு செல்லுதல் | 5.00 |
| 2 | குளச்சல் நகராட்சி –வி.கே.பி பொட்டல் பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து கடற்கரை பகுதி மற்றும் சுற்று வட்டார பகுதிகளுக்கு குழாய் பதித்து தண்ணீர் கொண்டு செல்லுதல் | 5.00 |
| | **மொத்தம்** | **10.00** |

மேற்காணும் விவரங்கள் மன்றத்தின் தகவலுக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1341/2018/இ1

**தீர்மானம் எண்.1919 அங்கீகரிக்கப்பட்டன**

**பொருள் எண்.4**

இந்நகராட்சி அலுவலகத்தில், மின்வெட்டு நேரஙகளில் அலுவலகப் பணிகள் பெரிதும் பாதிக்கப்படுவதாலும், கணனி வரி வசூல் மையம் இயஙகாத நிலை ஏற்பட்டு, வருவாய் இழப்பு ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டும், கே.எஸ்.எஸ்.எஸ் காலனி குடிநீரேற்றும் நிலையத்தில் நிறுவப்பட்டுள்ள 30KVA ஜெனரேட்டரை அஙகிருந்து மாற்றி அலுவலக வளாக தென்கிழக்கு மூலையில் நிறுவுவதற்கு, அதற்கான மேற்கூரை அமைத்து மின் இணைப்பு மற்றும் மின் மாற்றி வசதிகள்

செய்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.1,50,000/–க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1452/2018/இ1

**தீர்மானம் எண்.1920 அங்கீகரிக்கப்பட்டன**

**பொருள் எண்.5**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட நரிக்கல் பகுதியில் புதிதாக போடப்பட்ட Layout–ல் நகராட்சிக்கு வழஙகப்பட்ட காலி இடத்தில் முள்வேலி, நுழைவு வாயில் மற்றும் பெயர் பலகை அமைத்தல் பணிகளை மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.1,20,000/–க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1452/2018/இ1

**தீர்மானம் எண்.1921 அங்கீகரிக்கப்பட்டன**

**பொருள் எண்.6**

நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை ந.க.எண்.7366/2016/UPA2 நாள் : 03.09.2018–ன் படி வரப்பெற்றுள்ள சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுஙகுமுறை) துணைவிதிகள் 2018 நகர்மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

## சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுஙகுமுறை) துணை விதிகள், 2018

## <u>அறிவிப்பு</u>

சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுஙகுமுறை) சட்டம், 2014 (மத்திய சட்டம் எண்.7/2014) 37வது பிரிவின்கீழ் வழஙகப்பட்டுள்ள அதிகாரஙகள் மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுஙகுமுறை) விதிகள், 2015 மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு, விற்பனை ஒழுஙகுமுறை மற்றும் உரிமம் வழஙகுதல்) திட்டம், 2015–ன்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளின் கீழ் குளச்சல் நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுஙகுமுறை) துணை விதிகள், 2018 கீழ்க்கண்டவாறு ஏற்படுத்தப்படுகின்றது.

மதுரை மாநகராட்சி சட்டம், 1971 அத்தியாயம் 15 பிரிவு 433 / கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம், 1981 அத்தியாயம் 15 பிரிவு 432 / தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 அத்தியாம் 14 பிரிவு 306 மற்றும் அதன் உட்பிரிவுகளில் வழஙகப்பட்டுள்ள அதிகாரஙகளின்படியும், அவற்றிற்கு ஏற்படுத்தப்படும் திருத்தஙகளுக்கு உட்பட்டும், மற்றும் சாலையோர விற்பனையினை ஒழுஙகுப்படுத்தவும், குளச்சல் நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுஙகுமுறை) துணை விதிகள், 2018 ஏற்படுத்தப்படுகின்றது.

## அத்தியாயம்–1
## முதனிலை

1. **குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.–** இந்த துணை விதிகள் குளச்சல் நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுஙகுமுறை) துணை விதிகள், 2018 என்றழைக்கப்படும்.

(2) இந்த துணை விதிகளானது வெளியிடப்படும் நாள் முதல் அமுலுக்கு வரும்

2. **பொருள் வரையறைகள்.–** இந்த துணை விதிகளில், உபயோகப்படும் வார்த்தைகளுக்கான பொருள் வரையறை,

**(i)** "சட்டம்" என்பது சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) சட்டம், 2014 (மத்திய சட்டம் எண்.7/2014) என்று பொருள்படும்;

**(ii)** "விற்பனை திட்டம்" என்பது சட்டத்தின் 21ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட விற்பனை திட்ட வரைப்படம் என்று பொருள்படும்;

**(iii)** "விதிகள்" என்பது தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) விதிகள், 2015 என்று பொருள்படும்;

**(iV)** "திட்டம்" என்பது சட்டத்தின் 38வது பிரிவின் கீழ் கட்டமைக்கப்பட்ட தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு, விற்பனை ஒழுங்குமுறை மற்றும் உரிமம் வழஙகுதல்) திட்டம், 2015 என்று பொருள்படும்;

**(V)** "நகர விற்பனைக் குழு" என்பது விதிகளின் கீழ் அமைக்கப்பட்ட ஒரு நகர விற்பனைக் குழு என்று பொருள்படும்;

சட்டம், விதிகள் அல்லது திட்டம் ஆகியவற்றில் வரையறுக்கப்பட்ட வார்த்தைகளும், வெளிபாடுகளும் இந்த துணை விதிகளில் பயன்படுத்தப்படுகின்றன. அவை முறையே சட்டம், விதிகள் அல்லது திட்டம் ஆகியவற்றில் கொண்டுள்ள அதே பொருள்படும்.

## அத்தியாயம்–2

## விற்பனை மண்டலத்தில் விற்பனை செய்யும் விதம் மற்றும் ஒழுஙகு முறைகள்

**3.(1)** பாத சாரிகளின் நடமாட்டம் (Foot fall) மற்றும் சாலையின் அகலம், வாகனம், மற்றும் பாதசாரிகளுக்கான சீரான இயக்கம் ஆகியவற்றின் தன்மையை கருத்தில் கொண்டு விற்பனை மண்டலஙகளை நகர விற்பனைக் குழு முடிவு செய்யும்.

(2) ஒரு இடத்தின் கொள்திறனுக்கேற்ப சாலையோர வியாபாரிகளின் எண்ணிக்கை வரையறுக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் நகர விற்பனைக் குழுவால் நிர்ணயிக்கப்பட்டவாறு நடமாடும் விற்பனையாளர்களின் எண்ணிக்கை வரம்பை மீறாமல் இருப்பது குறித்து குளச்சல் நகராட்சியால் அஙகீகரிக்கப்பட்ட அலுவலரால் சரிப்பார்க்கப்பட வேண்டும்.

(3) சாலையின் அகலத்தைக் கொண்டும், சாலை விவரிப்பு குறித்தான கீழ்காணும் விவரஙகளைக் கொண்டும் இத்திட்டத்தில் கட்டுபடுத்தப்பட்ட விற்பனை மண்டலஙகளை விவரிக்கப்பட வேண்டும்.

(i) இரு வழி போக்குவரத்து கொண்ட 6 மீட்டர் அகலம் கொண்ட சிறிய சாலைகளில், நிலையான சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது. இருப்பினும், அத்தகைய சாலைகளில் எந்தவித நேரத்திலும் வாகனஙகள் அனுமதிக்கப்படாத சாலையாக அறிவிக்கப்பட்டால், அச்சாலைகளில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(ii) 3 மீட்டர் முதல் 5 மீட்டர் வரை அகலமான சிறிய சாலைகளில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது. இருப்பினும், அத்தகைய சாலைகள் ஒரு வழி வாகன சாலை என அறிவிக்கப்பட்டிருந்தால், சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(iii) 5 மீட்டர் முதல் 6 மீட்டர் வரை அகலமான சாலைகளில், சாலையின் ஒரு புறத்தில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(iV) 10 மீட்டர் மற்றும் அதற்கு மேல் அகலமான பெரிய சாலைகளில், சாலையின் இரு புறமும் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(V) ஒரு சாலையில் விற்பனைஅனுமதிக்கப்பட்ட இடத்தில் அதன் கொள்திறனுக்கேற்ப சாலையோர விற்பனையாளர்களின் எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

(Vi) சீரான போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் நடமாட்டம் குறித்து காவல்துறையின் அனுமதி பெறப்பட்ட பின்னர் தான் நிலையான சாலையோர விற்பனை அனுமதிக்கப்பட வேண்டும். தேவைப்பட்டால், அந்த இடத்தில் வாகன நிறுத்தம் தடை செய்யப்பட வேண்டும்.

(Vii) வாகன போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் நடமாட்டம் ஆகியவற்றினை கருத்தில் கொண்டு தான், சாலைகளில் நடமாடும் சாலையோர விற்பனை அனுமதிக்கப்பட வேண்டும்.

(Viii) சாலை வடிவமைப்பு குறித்தான அறிவுரைகள், இந்த துணை விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(4) சாலையோர விற்பனை தடைச் செய்யப்பட்ட மண்டலங்களின்,

(i) அரசு கட்டிடங்கள், உயர்நீதி மன்றம், பிற நீதிமன்றங்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், மாவட்ட ஊராட்சி / மாநகராட்சி / நகராட்சி அலுவலகங்கள், தீயணைப்பு நிலையங்கள் ஆகியவற்றின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 10 மீட்டர் நீளத்திற்கும்,

(ii) இரயில் நிலையங்களின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 50 மீட்டர் நீளத்திற்கு,

(iii) நகர எல்லைக்குட்பட்ட இரயில் கடவுப்பாதையின் இரு பக்கங்களிலும் 30 மீட்டர் நீளத்திற்கும்,

(iV) பேருந்து நிலையங்களின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 50 மீட்டர் நீளத்திற்கு,

(V) பண்டைய நினைவுச்சின்னங்கள் மற்றும் தொல்பொருளியல் தளங்கள் மற்றும் அகழ்வுகள் சட்டம், 2010ன்கீழ் அறிவிக்கப்பட்ட இடங்களில் பாதுகாப்பு கருதி சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது.

(Vi) மரபுரிமை சொத்து காப்பு விதிகளில் தடை செய்யப்பட்ட பகுதிகள்

(Vii) இரண்டு அல்லது அதிகமான சாலைகள் குறிப்பிட்ட இடங்களில் அனைத்து பக்கங்களில் 30 மீட்டர் நீளத்திற்கு

(Viii) 'எந்த ஒரு கல்வி நிறுவனத்தின் நுழைவு வாயில் மற்றும் வெளியேரும் வாயிலிருந்து 30 மீட்டர் நீளத்திற்கு.

(ix) பாதுகாப்பு கோணத்தில் தடை செய்யப்பட்ட எந்த பகுதியிலும்

(x) நகர விற்பனைக் குழுவின் ஒப்புதல் பெற்று நகரின் எந்த ஒரு பகுதியிலும் சாலையோர விற்பனை தடை செய்வது குறித்து உள்ளாட்சி அமைப்பு முடிவு செய்து, அத்தகைய இடங்களில் சாலையோர விற்பனை தடை செய்யப்பட வேண்டும்.

**குறிப்பு–** கணக்கெடுப்பின்போது அறியப்பட்ட எந்தஒரு அங்காடியையோ அல்லது இயற்கையாக அமைய பெற்ற அங்காடியையோ, விற்பனை தடை செய்யப்பட்ட பகுதியில் இணைக்கக்கூடாது.

**4. சாலையோர விற்பனையாளர்களுக்கான கட்டுப்பாடு.–** எந்த ஒரு விற்பனை மண்டலத்திலும், விற்பனை செய்ய சான்று பெற்ற சாலையோர விற்பனையாளர்கள்;

(i) வாகன போக்குவரத்து, மிதி வண்டி மற்றும் பாதசாரி நடமாற்றத்திற்கு தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(ii) கதவு, நுழைவு வாயில், தீயணைப்பு கதவுகள் அல்லது அவசரகால வெளியேறும் பாதை ஆகியவற்றிற்கு முட்டுகொடுத்து தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(iii) குடிநீர் வழஙகல், கழிவுநீர், தொலைபேசி, மின்சாரம் அல்லது இதே மாதிரியான அமைப்புகள் போன்ற எந்தவொரு பயன்பாட்டிற்கும் தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(iV) சாலையில் அல்லது அதன் பக்கத்தில் உள்ள எந்த கட்டமைப்புகளுக்கோ, வழிகாட்டு பலகைகள், அறிவிப்பு பலகைகள் , நகர வேலைகள் அல்லது நடவடிக்கைகளுக்கோ தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(V) ஆட்சேபனைக்குரிய சேவைகளையோ அல்லது பொருட்களையோ விற்பனை செய்வதோ கூடாது,

(Vi) நகர விற்பனைக் குழுவால் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தை காட்டிலும் அதிகமான இடத்தை ஆக்கிரமிப்பு செய்யக் கூடாது,

(Vii) நகர விற்பனைக் குழுவால் குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு பின் சேவைகளையோ அல்லது பொருட்களை வணிகம் செய்வதோ கூடாது,

(Viii) உள்ளாட்சி அமைப்பால் அடையாளம் காணப்பட்ட இடங்களை தவிர, இதர இடங்களில் திடக்கழிவுகளை கொட்டக்கூடாது.

(ix) விற்பனை சான்றிதழ் காலாவதியாகிய பின்னர் பொருட்களையோ அல்லது சேவைகளையோ அல்லது விற்பனையோ செய்யக்கூடாது.

(x) ஒலி பெருக்கிகள், மெகா போன்கள், ஒலி அமைப்புகள் அல்லது பிற ஒலி பெருக்கி உபகரணங்கள் மற்றும் பிரதிபலிப்பு விளம்பரங்கள் ஆகியவற்றினை பயன்படுத்தக் கூடாது.

**5. சாலையோர வியாபாரிகளின் பொறுப்பு,–** சாலையோ வியாபாரிகள் அல்லது அவரது குடும்ப உறுப்பினர்கள் அல்லது பணியாளரின் கடமைகள்,

(i) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட வேண்டும்,

(ii) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் மட்டும் விற்பனை செய்யப்படவேண்டும்,

(iii) விற்பனை செய்யும் இடத்தில் விற்பனை சான்றிதழ் காட்சிக்கு எப்பொழுதும் வைக்கப்பட வேண்டும்,

(iV) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையோர விற்பனையாளர் அல்லது அவரது குடும்ப உறுப்பினர் அல்லது அவரின் பணியாளர் விற்பனை இடத்தில் விற்பனை செய்யும்போது இருக்க வேண்டும்.

(V) எப்பொழுதும் விற்பனை இடத்தினை பாதுகாப்பாகவும், நல்ல நிலையில் வைத்திருக்க வேண்டும்,

(Vi) உள்ளாட்சி அமைப்பின் தேவைக்கேற்ப பாதுகாப்பு மற்றும் சுகாதார விதிகளை கடைப்பிடிக்க வேண்டும்,

(Vii) உணவு மாசுபடுதல் தடுப்புச் சட்டம், 1954 அல்லது இதர விதிகளை கடைப்பிடிக்க வேண்டும்,

(Viii) நகராட்சி திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016ஐ கடைப்பிடிக்க வேண்டும்,

(ix) நெகிழி கழிவு மேலாண்மை விதிகள், 2016ஐ கடைப்பிடிக்க வேண்டும்,

(x) தகுதியுடைய அலுவலர் கோரும்போது விற்பனை சான்றிதழ் காண்பிக்க வேண்டும், மற்றும்

(xi) இந்த துணை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிகளையும் பின்பற்ற வேண்டும்.

## அத்தியாயம்–3
## கட்டணங்கள், வரிகள் மற்றும் அபராதங்கள்

**6. விற்பனை கட்டணம்,– (1)** சாலையோர வியாபாரிகள் உள்ளாட்சி அமைப்பிற்கு விற்பனை கட்டணம் செலுத்த வேண்டும்.

(2) உப விதி (1)ன்படியான விற்பனை கட்டணம் கீழ்க்காணும் பட்டியலின்படியாகும்.

| வ. எண். | சாலையோர விற்பனையாளரின் வகை | பரப்பளவு | விற்பனை கட்டணம் |
|---|---|---|---|
| 1. | நிலையான விற்பனையாளர் (முழு நேரம்) | 10 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.1250/– |
| | | 10 முதல் 25 சதுர அடிகள்வரை | வருடத்திற்கு ரூ.2500 |
| | | 25 சதுர அடிகளுக்குமேல் | வருடத்திற்கு ரூ.4500/– |
| 2. | நிலையான விற்பனையாளர் (பகுதி நேரம் அல்லது நேர பகிர்வு) | 10 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.600/– |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.1250/– |
| | | 25 சதுர அடிகளுக்குமேல் | வருடத்திற்கு ரூ.2500/– |
| 3. | நடமாடும் விற்பனையாளர் (மேட்டார் பொருத்தப்பட்ட வண்டியுடன்) | 10 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.1250/– |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.2500/– |

| | | | |
|---|---|---|---|
| | | 25 சதுர அடிகளுக்குமேல் | வருடத்திற்கு ரூ.4500/– |
| 4. | நடமாடும் விற்பனையாளர் (மேட்டார் பொருத்தப்படாத வண்டியுடன்) | 10 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.600/– |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.1250/– |
| | | 25 சதுர அடிகளுக்குமேல் | வருடத்திற்கு ரூ.2500/– |
| 5. | நடமாடும் விற்பனையாளர் (தலைசுமை) | – | வருடத்திற்கு ரூ.250/– |

(3) மூன்று வருடங்களுக்கு ஒரு முறை விற்பனை கட்டணம் திருத்தியமைக்கப்பட்டு, உள்ளாட்சி அமைப்பின் விளம்பர பலகையில் அறிவிப்பு வெளியிடப்பட வேண்டும்.

**7. பராமரிப்பு கட்டணம்,– (1)** சாலையோர விற்பனையாளரின் வகை மற்றும் அங்காடியின் தகுதியின் அடிப்படையில், உள்ளாட்சி அமைப்பால் செய்யப்பட்டுள்ள குடிமை நலன்கள் மற்றும் வசதிகளுக்காக மாதாந்திர பராமரிப்பு கட்டணம் செலுத்தப்பட வேண்டும். சாலையோர விற்பனையாளர்கள் மற்றும் அங்காடி வகைகள் நகர விற்பனைக் குழுவால் நிர்ணயிக்கப்படும்.

(2) உப விதி (1)யில் குறிப்பிடப்பட்டுள்ள பராமரிப்பு கட்டணம் மாதத்திற்கு ரூ. 10/–க்கு குறையாமலும், ரூ. 40/–க்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

(3) பராமரிப்பு கட்டணம் ஒவ்வொரு ஆண்டும் குறைந்தபட்சம் 2 சதவீதம் உயர்த்தப்பட வேண்டும்.

***( (*) மாநகராட்சி / நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை துணை விதிகளின்படி முடிவு செய்யப்பட வேண்டும்.)***

**8. அபராதம் விதித்தல்,–** எந்தவொரு சாலையோர விற்பனையாளரும்,

(i) விற்பனை சான்றிதழ்படி, மாற்று இடத்திற்கு செல்ல அல்லது காலி செய்ய தவறும்பட்சத்தில், அல்லது

(ii) விற்பனை சான்றிதழ் இல்லாமல் விற்பனை செயலில் ஈடுபட்டாலோ, விற்பனை சான்று மற்றும் சாலையோர வியாபாரம் ஒழுங்குமுறை சட்ட பிரிவுகள் மற்றும் அவற்றின் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகள் மற்றும் திட்டத்தில் உள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறும்போது,

மாதாந்திர கட்டணத்தில் (மூன்று) மடங்காக அபராதம் செலுத்தப்பட வேண்டும்.

(2) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை சாலையோர விற்பனைபாளர் மூன்று முறைகள் மீறினால் அவரின் விற்பனை சான்று இடைநீக்கம் செய்யப்படும். நான்காவது முறையாக விதிமுறைகளை மீறினால் அவரின் விற்பனை சான்று ரத்து செய்யப்படும்.

## அத்தியாயம்– 4

### பலவகை

**9. விற்பனை மண்டலத்தில் போக்குவரத்தினை ஒழுங்குமுறை படுத்துதல்.–**

(1) நகர விற்பனை குழுவால் அறிவிக்கப்பட்ட விற்பனை மண்டலங்களில், ஒரு வழி வாகன போக்குவரத்து, வேக கட்டுப்பாடு, வாகன நிறுத்தம், கனரக வாகனங்கள் இயக்கம் மற்றும் இது குறித்த இதர பொருள்கள் குறித்து போக்குவரத்து காவல்துறையால் முடிவு செய்யப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் விற்பனை மண்டலம் அமைப்பது குறித்து போக்குவரத்து காவல்துறையால் அங்கீகரிக்கப்படவில்லையெனில், அந்த விற்பனை மண்டலத்தினை மாற்றியமைப்பது குறித்தோ அல்லது விற்பனை மண்டலத்தினை ரத்து செய்வது குறித்தோ நகர விற்பனைக் குழு பரிசீலனை செய்ய வேண்டும்.

(2) விற்பனை மண்டலத்தில், விற்பனை பகுதி, நடைபாதை மற்றும் வண்டி பாதை ஆகியவற்றினை உள்ளாட்சி அமைப்பால் தெளிவாக தெளிவுபடுத்த வேண்டும்.

**10. விற்பனை மண்டலத்தில் பொது மக்களுக்கு வழஙகப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் தரத்தினை ஒழுஙகுபடுத்துதல்.–** எந்த ஒரு விற்பனையாளரும், தயார்

செய்யப்பட்ட அல்லது அந்த இடத்தில் தயாரித்து விற்பனை செய்யும் உணவு பொருட்கள் குறித்து உணவு மாசுபடுதல் தடுப்புச் சட்டம், 1954ல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிமுறைகளையும் பின்பற்ற வேண்டும். தவறும்பட்சத்தில், மேற்படி சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சம்பந்தப்பட்ட அதிகாரம் பெற்ற அலுவலரால் தண்டனைக்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் மற்றும் தகுதிவாய்ந்த நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட வேண்டும். நகர விற்பனைக் குழுவால் அந்த சாலையோர வியாபாரியின் விற்பனை சான்றினை உடனடியாக ரத்து செய்யப்பட வேண்டும்.

**11. விற்பனை மண்டலங்களில் குடிமை சேவைகளை ஒழுங்குப்படுத்துதல்,– (1)** விற்பனை மண்டலங்களில், பொது கழிப்பிடம் மற்றும் குடிநீர் வசதிகளை உள்ளாட்சி அமைப்பால் ஏற்படுத்த வேண்டும்.

(2) உள்ளாட்சி அமைப்பால் திடக்கழிவுகளை சரியான முறையில் சேகரிக்கப்பட வேண்டும்.

(3) சாலையோர வியாபாரிகள் தனிநபர் தேவைக்கு மின் செரிவூட்டும் சாதனம் (rechargeable lamps) அல்லது சுயமாக மின் உற்பத்தி செய்யும் சாதனங்கள் உபயோக படுத்தல் வேண்டும்.

(4) விற்பனை மண்டலங்களில் தனி நபர் மின்சார இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு வழங்கக் கூடாது.

(5) மின்சார கம்பஙகளிலிருந்து முறையற்ற மின் உபயோகத்தை தடுக்கப்படும்.

ந.க.எண்.5156/2009/TPI

**தீர்மானம் எண்.1922 அங்கீகரிக்கப்பட்டன**

**பொருள் எண்.7**

இந்திய வானிலை ஆய்வு மையத்தின் புயல் எச்சரிக்கையினை (Red Alert) தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் மற்றும் பேரிடர் மேலாண்மை இயக்குநரின் அறிக்கையின் படி, மாவட்ட துணை ஆட்சியர் முகாமிட்டு கூறிய அறிவுரையின் அடிப்படையில் 06.10.2018 முதல் 07.10.2018 வரையிலான 3 நாட்களும் 15 KVA ஜெனரேட்டர் வாடகைக்கு எடுத்து நகராட்சி அலுவலக வளாகம் மற்றும் வி.கே.பி பள்ளிக்கூடம் அருகில் அமைந்துள்ள அரசு நடுநிலைப்பள்ளி ஆகிய இரண்டு இடங்களில் மின் விளக்கு வசதி செய்தல், நகராட்சி அலுவலக வளாகத்தில் 4 எண்ணம் குடிநீர் தொட்டி வாடகைக்க எடுத்து வைத்தல் மற்றும் அரசு நடுநிலைப்பள்ளியிலுள்ள ஜெனரேட்டரை இயக்குவதற்கு பேட்டரி சார்ச் (Battery Charge) மற்றும் இயக்குதல் போன்ற பணிகளை மேற்கொண்ட வகையில் ரூ.32,500/–ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றஅனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1495/2018/இ1

**தீர்மானம் எண்.1923 அங்கீகரிக்கப்பட்டன**

**பொருள் எண்.8**

குளச்சல் நகராட்சி குளச்சல் ‘A’ கிராமம் புலஎண்.P2-18/3 மற்றும் P2-18/11-ல் உள்ள 55.00 சென்ட் இடத்தில் பள்ளிக்கூடம் கட்டிடம் கட்டுவதற்கு வேண்டி திரு.M.பீர் முகம்மது, தாளாளர், ஓரியன்ட் மெட்ரிக்குரேசன் பள்ளி என்பவரால் குளச்சல் நகராட்சி ஆணையாளர் வழியாக நகர் ஊரமைப்புத்துணை இயக்குநர், திருநெல்வேலி அவர்களுக்கு விண்ணப்பம் செய்யப்பட்டதில், மேற்படி புல எண். P2-18/3 மற்றும் P2-18/11-ஆகியவை கலப்பினக் குடியிருப்பு பகுதியில் இருப்பதால் அவற்றை கல்வி உபயோக மாற்றம் செய்து விண்ணப்பிக்குமாறு மனுதாரரிடம் நேரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி புலஎண் கொண்ட நிலத்தின் அருகில் ஏற்கெனவே ஓரியன்ட் மெட்ரிக்குலேசன் ஸ்கூல் என்ற கல்வி நிலையம் உள்ளது. எனவே, தற்போது கலப்புக் குடியிருப்பு பகுதியில உள்ள புல எண். P2-18/3 மற்றும் P2-18/11-ல் உள்ள 55.00 சென்ட் இடத்தினை கல்வி உபயோகம் என நில உபயோக மாற்றம் செய்வதற்கும் இதனை தமிழ் (ம) ஆஙகில நாளிதழில் பிரசுரிக்கவும், புரசுரத்திற்காகும் செலவு தொகையை மனுதாரரிடமிருந்து வசூலிக்கவும் நகர்மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.18/2016/TPI

தீர்மானம் எண்.1924 அங்கீகரிக்கப்பட்டன

பொருள் எண்.9

இந்நகராட்சியில், தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2018–19–ன் கீழ், ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ள சாலை பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில அளவிலான பத்திரிக்கைகள்Decan chronide (ஆஙகிலம்) மற்றும் நமது புரட்சிதலைவி அம்மா (தமிழ்) ஆகியவற்றில் 22.09.2018 அன்று வெளியிட்ட வகையில் ரூ.55,283/– வழஙக கேட்டு M/s.Flame Advertisiing, Chennai நிறுவனத்திடமிருந்து பட்டியல் எண்.P/413/Oct-18 Dated :08.10.2018 பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை வழஙகுவதற்கு மன்ற அஙகீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.650/2018/இ1

தீர்மானம் எண்.1925 அங்கீகரிக்கப்பட்டன

பொருள் எண்.10

இந்நகராட்சியில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்திற்கு தேவையான இட்லி டோக்கன், சாம்பார் டோக்கன், தயிர் டோக்கன் அச்சடிப்பதற்கு உள்ளூர் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட விலைப்பட்டியல் பின்வருமாறு,

| வரிசை எண் | பெயர் | எண்ணிக்கை | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | தாசன் அச்சகம் | 1 புக்<br>(1 முதல் 1000 நம்பர்) | 115/– |
| 2 | கிறேஸ் அச்சகம் | 1 புக்<br>(1 முதல் 1000 நம்பர்) | 115/– |

மேற்காணும் இரண்டு விலைப்பட்டியலில் தாசன் அச்சகம் விலை குறைவாக இருப்பதால் மேற்படி அச்சகத்திற்கு வழஙக மன்ற அஙகீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1117/2015/அ1

தீர்மானம் எண்.1926 அங்கீகரிக்கப்பட்டன

பொருள் எண்.11

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 24 வார்டுகளுக்கு குடியிருப்பு, வணிகம் மற்றும் தொழிற்சாலை கட்டிடஙகளுக்குரிய சுயமதிப்பீட்டு அறிக்கையை நகராட்சி ஆணையர், குளச்சல் நகராட்சி என்ற முகவரியிட்டு நேரிடையாகவோ அல்லது தபால் மூலமாகவோ அல்லது இணைய வசதி மூலமும் பொது மக்கள் 24.11.2018–க்குள் நகராட்சியில் ஒப்படைக்க தினத்தந்தி நாளிதழில் 23.10.2018–ல் விளம்பரம் செய்த வகையில் ரூ.17892/– வழஙக மன்ற அஙகீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1249/2015/அ1

தீர்மானம் எண்.1927 அங்கீகரிக்கப்பட்டன

பொருள் எண்.12

இந்நகராட்சிக்கு 2017–18–ஆம் ஆண்டிற்கான தணிக்கை ரிப்போர்ட் மற்றும் ஸ்பைரல் பயின்டிஙக செய்த வகையில் ரூ.3225/– ம் மேலும் இந்நகராட்சி அலுவலகத்திற்கு தேவையான ஆணையர் கையெழுத்து ஸ்டாம்பு 2, அலுவலகம் ரவுண்ட் ஸ்டாம்பு –1, அலுவலகம் முகவரி மற்றும் தேதி ஸ்டாம்பு–1 ஆகியவை அச்சடித்த வகையில் ரூ.1350 /– மொத்தம் சேர்த்து ரூ.4575/–ஐ தாசன் அச்சகத்திற்கு வழஙக மன்ற அஙகீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.4826/2012/அ1

**தீர்மானம் எண்.1928 அங்கீகரிக்கப்பட்டன**

**பொருள் எண்.13**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் நெசவு தொழிற்கூடம் மூலம் வரும் இரைச்சல் மாசுபாடு தொடர்பாக பசுமை தீர்ப்பாயத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கு எண்.167/2017 தொடர்பாக எதிர்வாதுரை தாக்கல் செய்த வகையில் ரூ.15000/— வழக்கறிஞர் கட்டணம் செலுத்த மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.2278/2016/எச்1

**தீர்மானம் எண்.1929 அங்கீகரிக்கப்பட்டன**

**பொருள் எண்.14**

இந்நகராட்சி குடிநீர் வினியோகத்திற்காக அமைக்கப்பட்டுள்ள 138 எண்ணம் வால்வு பிட்டுகளில், திறந்த நிலையில் மற்றும் தாழ்வான பகுதிகளில் உள்ளவற்றில் பொது மக்கள் குப்பைகள் மற்றும் கோழி கழிவுகளை கொட்டுவதால், மேற்படி இடங்களில் சுகாதார கேடு ஏற்படுவதுடன், குடிநீர் மாசுபடுவதற்கு வாய்ப்பு உள்ளது. மேலும் இதனால் வால்வுகளை இயங்குவதிலும் சிரமம் ஏற்பட்டு வருகிறது. எனவே திறந்த நிலையில் மற்றும் தாழ்வான பகுதிகளில் உள்ள வால்வு பிட்டுகளில் பக்க சுவர் மற்றும் மேல்மூடி (Side wall and cover slab) அமைப்பதற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.2,20,000/—க்கும், மேற்படி பணியினை குடிநீர் வழஙகல் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1114—1/2018/இ2

**தீர்மானம் எண்.1930 அங்கீகரிக்கப்பட்டன**

**பொருள் எண்.15**

தமிழ்நாடு வார்டு மறுவரையறை ஆணையம் சென்னை ந.க.எண்.3174/2017/E.G-1 நாள் 19.10.2017—ன் படி குளச்சல் நகராட்சியில் உள்ள 24 வார்டுகளில் வார்டு மறுவரையறை பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இப்பணியினை முடித்து தமிழ்நாடு மறுவரையறை ஆணையம் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை, மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் திருநெல்வேலி மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் ஆகிய அலுவலகங்களுக்கு ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி வார்டுகள் மறுவரையறைக்கான 24 வார்டுகளிலும் புதிய வரைபடஙகள் தயார் செய்வும் வரைபடஙகள் Colour print எடுக்கவும் 24 வார்டுகளுக்கான கருத்துருக்கள் Book binding செய்வதற்கும் ஆன செலவுத்தொகை ரூ.54215/— நகரமைப்பு ஆய்வாளர் திருமதி.R.கீதா அவர்களால் செலவு செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்படி செலவுத்தொகை ரூ.54315/— அன்னாருக்கு வழஙகுவதற்கு நகர்மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்பட்டுள்ளது.

ந.க.எண்.1293/2018/TPI

**தீர்மானம் எண்.1931 அங்கீகரிக்கப்பட்டன**

**பொருள் எண்.16**

ஆணையர் குளச்சல் நகராட்சி அவர்களின் செயல்முறை ஆணையின்படி தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்ட செல்வி.கே.சாந்தி வருவாய் உதவியாளருக்கு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையின்படியும், நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் அறிவுறுத்தலின் படியும், அடிப்படை விதிகள் 53(1)—ன் படி தனியர் (LPD) கடைசியாக வாஙகிய ஊதியத்தில் 50 சதவீதத்தை பிழைப்பூதியமாக 26.03.2009 முதல் வழஙகவும் அவற்றுள் 26.03.2009 முதல் 30.09.2018 வரை உள்ள காலத்திற்கான பிழைப்பூதிய நிலுவைத்தொகை ரூ.689310 (பட்டியலில் காணுமாறு) (115 x 5994-689310) கணக்கிடப்பட்டுள்ளது.

இதனை நகராட்சி நிதி நிலைமையை கருத்தில் கொண்டு நான்கு தவணையில் வழங்கிடவும், அவற்றுள் முதல் தவணை ரூ.172328/—க்கான தொகையை நீதிமன்றம் வழியாக 01.11.2018 நாளிட்ட காசோலையாக ஒப்படைக்கப்படுகிறது. அதனை தொடர்ந்து மாதந்தோறும் தனியருக்கு பிழைப்பூதியம் துறைசார் ஒழுங்கு நடவடிக்கையில் இறுதியாணை வெளியிடும் வரை வழங்கவும் மன்ற அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1572/2009/சி1

**தீர்மானம் எண்.1932 அங்கீகரிக்கப்பட்டன**

**பொருள் எண்.17**

இந்நகராட்சி கண்காணிப்பு வாகனம் TN 75 K 6526—ல் Dynomo Alternator பழுதடைந்ததால் வாகனம் இயக்க இயலாத நிலை ஏற்பட்டது. அலுவலகப் பணிகளில் மேற்படி வாகனத்தின் அவசியத்தை கருத்தில் கொண்டு, Dynomo Alternator பழுது நீக்கப்பணிகள் மேற்கொள்வதற்கு கீழ்க்காணும் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1 | M/s. Kodai Cars pvt.Ltd, Parvathipuram, Nagercoil | Rs.9558/- |
| 2 | M/s.Lilly Asir Auto stores, Karumavilai, Karungal | Rs.3620/- |

மேற்காணும் இரண்டு விலைப்புள்ளிகளில், M/s.Lilly Asir Auto stores, Karumavilai நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கப்பட்டு, பணி மேற்கொண்ட வகையில் பட்டியல் தொகை ரூ.3620/—ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.7057—1/11//இ1

**தீர்மானம் எண்.1933 அங்கீகரிக்கப்பட்டன**

**பொருள் எண்.18**

இந்நகராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர்உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017—18—ன் கீழ், ரூ.5,00,000/— மதிப்பீட்டில், பாலத்தன்கரை பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து கடற்கரை பகுதி மற்றும் சுற்று வட்டார பகுதிகளுக்கு குழாய் பதித்து குடிநீர் கொண்டு செல்லுதல் பணிக்கு, 25.10.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.சி.சந்திரசேகர்,<br>ஒப்பந்ததாரர்,<br>கறுக்கன்குழி, திக்கணஙகோடு அஞ்சல் | மதிப்பீட்டை விட 8.30% குறைவு |
| 2 | திரு.ஆர்.தேவராஜ்<br>ஒப்பந்ததாரர்,<br>கருமன்கூடல், மண்டைக்காடு அஞ்சல் | மதிப்பீட்டை விட 8.70% குறைவு |
| 3 | திரு.என்.சிவபிரகாஷ்<br>ஒப்பந்ததாரர்,<br>கோலார்பட்டி, பொள்ளாச்சி | மதிப்பீட்டை விட 5.51% குறைவு |

மேற்காணும் மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.ஆர்.தேவராஜ், ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 8.70% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி, முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கு மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1341/2018//இ1

**தீர்மானம் எண்.1934 அங்கீகரிக்கப்பட்டன**

**பொருள் எண்.19**

இந்நகராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர்உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017–18–ன் கீழ், ரூ.5,00,000/– மதிப்பீட்டில், வி.கே.பி. பொட்டல் பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து கடற்கரை பகுதி மற்றும் சுற்று வட்டார பகுதிகளுக்கு குழாய் பதித்து குடிநீர் கொண்டு செல்லுதல் பணிக்கு, 25.10.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.சி.சந்திரசேகர்,<br>ஒப்பந்ததாரர்,<br>கறுக்கன்குழி, திக்கணஙகோடு அஞ்சல் | மதிப்பீட்டை விட 9.68% குறைவு |
| 2 | திரு.ஆர்.தேவராஜ்<br>ஒப்பந்ததாரர்,<br>கருமன்கூடல், மண்டைக்காடு அஞ்சல் | மதிப்பீட்டை விட 3.58% குறைவு |
| 3 | திரு.என்.சிவபிரகாஷ்<br>ஒப்பந்ததாரர்,<br>கோலார்பட்டி, பொள்ளாச்சி | மதிப்பீட்டை விட 5.39% குறைவு |

மேற்காணும் மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.சி.சந்திரசேகர் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 9.68% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி, முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழஙகியதற்கு மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1341/2018//இ1

**தீர்மானம் எண்.1935 அங்கீகரிக்கப்பட்டன**

**பொருள் எண்.20**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு மினி லாறி எண்.TN 74 T 5508 வாகனத்தின் மின்கலம் பழுதடைந்துள்ளதால் புதிய மின்கலம் வாஙக பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி கீழ்க்கண்டவாறு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | மாணிக்கம் பேட்ரிக் ஒர்க்ஸ்<br>நாகர்கோவில் | ரூ.8130/– |
| 2. | சிவனேஷ் பேட்ரிக் ஒர்க்ஸ்<br>நாகர்கோவில் | ரூ.8000/– |
| 3. | சாய் பேட்ரிக் சர்வீஸ்<br>குளச்சல் | ரூ.7800/– |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள சாய் பேட்ரிக் சர்வீஸ், குளச்சல் நிறுவனத்திலிருந்து புதிய மின்கலம் வாங்க மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.2913/2009//எச்1

**தீர்மானம் எண்.1936 அங்கீகரிக்கப்பட்டன**

**பொருள் எண்.21**

இந்நகராட்சிக்கு சொந்தமான கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடை எண்.47 முதல் 52 வரையுள்ள கடைக்கு 31.03.2018 டன் உரிமம் முடிவடைந்துள்ளதால் மேலும் 01.04.2018 முதல் 30.03.2021 வரை மூன்றாண்டுகளுக்கு வாடகை தொகையில் 15% வரி உயர்வு செய்யவும், கவியரசு கண்ணதாசன் வணிகவளாக கடை எண்.27–க்கு 31.10.2018 டன் உரிமம் முடிவடைவதால் மேலும் மூன்றாண்டுகளுக்கு (01.11.2018 முதல் 31.10.2021) வாடகை தொகையில் 15% வரி உயர்வு செய்யவும் மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

| வ. எண் | வரி எண் | கடை எண் | வாடகைதாரர் பெயர் | தற்போதைய வாடகை | 15% உயர்வு செய்த தொகை | உயர்வு செய்யப்பட்ட பின்னர் வாடகை தொகை |
|---|---|---|---|---|---|---|
| கலைஞர் கருணாநிதி வணிக வளாகம் | | | | | | |
| 1 | 148/2011005 | 471052 | எஸ்.பெரிய சுவாமி | 6900/– | 1035/– | 7935/– |
| கவியரசு கண்ணதாசன் வணிக வளாகம் | | | | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 148/2012007 | 27 | கிங்ஸ்லி மில்டன்ராஜ் | 1150/– | 173/– | 1323/– |

ந.க.எண்.2035/2015//அ1

**தீர்மானம் எண்.1937 அங்கீகரிக்கப்பட்டன**

**பொருள் எண்.22**

இந்நகராட்சிக்கு சொந்தமான குப்பைக்கிடங்கில் குப்பை கழிவுகள் மிக அதிகமாக சேர்ந்துள்ளதால், கிட்டாச்சி மற்றும் J.C.B இயந்திரம் மூலம் குப்பை கழிவுகளை தனியார் மூலம் ஒதுக்கி, இடத்தை சீர் செய்யவும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.100000/–க்கும் மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.998/2017//எச்1

**தீர்மானம் எண்.1938 அங்கீகரிக்கப்பட்டன**

**பொருள் எண்.23**

இந்நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் குப்பை கழிவுகள் அதிகமாக சேர்ந்துள்ளதால் தனியார் கிட்டாச் மற்றும் JCB இயந்திரம் மூலம் ஒதுக்கம் செய்வதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | நிறுவனம் | கிட்டாச் | JCB | நேரம் |
|---|---|---|---|---|
| 1 | ராஜுவ் எர்த் மூவர்ஸ் குளச்சல் | 1030 | 830 | ஒரு மணி நேரத்திற்கு |
| 2 | சுரேஷ் ஏஜென்சி ஆலஞ்சி | 1050 | 850 | ஒரு மணி நேரத்திற்கு |
| 3 | ஜோசப் கிருபை ஏஜென்சி குளச்சல் | 990 | 750 | ஒரு மணி நேரத்திற்கு |

மேற்படி பெறப்பட்ட மூன்று உள்ளூர் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஜோசப் கிருபை ஏஜென்சி, குளச்சல் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கியதற்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.998/2017/எச்1

**தீர்மானம் எண்.1939 அங்கீகரிக்கப்பட்டன**

**பொருள் எண்.24**

குளச்சல் நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் பணிபுரிந்து வரும் திரு.சி.சுந்தர்ராஜ் 08.09.1997 தேதி முதல் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறார். மேற்காணும் ஓட்டுநர் 20 ஆண்டுகள் மாசற்ற முறையில் பணி பார்த்தமைக்கு அரசாணை நிலை எண்.238 நாள் 01.10.1997–ன் படி வெகுமதி வழஙகுவது குறித்து நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களது அனுமதி பெற்றும் அரசாணையில் அறிவுறுத்தியவாறு சென்னையிலுள்ள எழுது பொருள் மற்றும் அச்சுத்துறை இயக்குநர் அவர்கள் மூலமாக தஙக பதக்கம் தயாரிக்கவும் அதற்காகும் செலவு தொகையினை பொது நிதியின் கீழ் வழஙகுவதற்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1197/2018/சி1

**தீர்மானம் எண்.1940 அங்கீகரிக்கப்பட்டன**

**பொருள் எண்.25**

இந்நகராட்சி கணினி பிரிவில் தற்போது பயன்பாட்டில் உள்ள 10 கணிணிகள் மற்றும் 4 பிரிண்டர்கள் ஆகியவை வாஙகப்பட்டு சுமார் 10 வருடஙகளுக்கு மேல் ஆகிவிட்டதால், அவற்றில்

அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு, அலுவலகப் பணிகள் பாதிக்கப்படுவதை கருத்தில் கொண்டும், தற்போது Centralised Web based system மூலம் அலுவலகம் பணிகள் மற்றும் வசூல் பணிகளை மேற்கொள்ள வேகம் மற்றும் திறன் கூடிய கணிணிகள், ஸ்கேனர் மற்றும் நெட்வொர்க் உடன் கூடிய பிரிண்டர்கள், தேர்தல் பணிக்கு திறன் கூடிய மடிக்கணிணி தேவைப்படுவதாலும், மேற்படி கணிணிகள் மற்றும் பிரிண்டர்கள் புதிதாக வாஙகுவதற்கு ரூ.8,00,000/—க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, நிர்வாக அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி 30.10.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | M/s.Data point,<br>181, Classic complex,<br>Opp.Anna stadium, Nagercoil | மதிப்பீட்டை விட 1.05% குறைவு |
| 2 | M/s.Act Automation,<br>Krishna Complex<br>M.s Road, Vadasery, Nagercoil | மதிப்பீட்டு விட 3.58% குறைவு |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s.Act Automation, Nagercoil நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டு விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், திறன் கூடிய 10 கணிணிகள், ஸ்கேனர் மற்றும் நெட்வொர்க் உடன் கூடிய 7 பிரிண்டர்கள், 4 டாட்மெட்ரிக்ஸ் பிரிண்டர்கள், ஒரு மடி கணிணி மற்றும் Antivirus, Network switch ஆகியவற்றை வாஙகுவதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.6805/2010/இ1

**தீர்மானம் எண்.1941 அஙகீகரிக்கப்பட்டன**

**பொருள் எண்.26**

இந்நகராட்சி அலுவலகத்தின் வடக்கு பக்கத்தில் உள்ள தடுப்பு சுவர் கனமழையின் காரணமாக இடிந்து விழுந்துள்ளதை திருப்பி கட்டுவதற்கும், அலுவலகத்தின முன் பகுதியில் நடைபாதை மிக மோசமாக சேதமடைந்து காணப்படுவதை சீரமைப்பதற்கும், அலுவலக கழிவறை கதவுகள் உடைந்துள்ளதை சரி செய்வதற்கும், துறைமுக வெற்றித்தூண் அருகில் தரைதளம் மிகவும் மோசமாக உள்ளதை சரி செய்வதற்கும், அம்மா உணவகத்தின் வடக்கு மற்றும் மேற்கு பக்க நடைபாதைகள் மழையினால் மிகவும் தாழ்வாக உள்ளதை சரி செய்வதற்கும் கீழ்காணும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

1. அலுவலகத்தின் முன்பகுதியில் Spootex Tiles போடுதல்
2. அலுவலக வடக்கு பக்க சுவரில் கான்கிரீட் அமைத்தல்
3. கழிவறையில் PVC போடுதல்
4. அம்மா உணவகத்தின் பக்க பாதைகள் சரி செய்தல்
5. வெற்றித்தூண் அருகில் பேவர் பிளாக் தளம் அமைத்தல்.

மேற்காணும் பணிகளை மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.4,70,000/—க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1567—1/2018/இ1

**தீர்மானம் எண்.1942 அஙகீகரிக்கப்பட்டன**

ஆணையாளர்/தனி அலுவலர்,
குளச்சல் நகராட்சி.